RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 228 ஆகஸ்டு 23, 2026 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

# திமுக நிர்வாக அமைப்பில் மாறுதல்கள் ஏன்? - மு.க.ஸ்டாலின் விவரிப்பு



சென்னை: ஆக.23-

“திமுகவின் தேர்தல் தோல்விக்கு எத்தனையோ காரணங்கள் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியாக பார்த்து குறைகளைக் கண்டறிந்து ஆளை மாற்றுவதைவிட முழுமையான ஒரு சுய பரிசோதனை வேண்டும் என முடிவெடுத்தேன். அந்த வகையில் திமுகவின் நிர்வாக அமைப்பில் பல மாறுதல்களைச் செய்திருக்கிறேன்” என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திமுக செயற்குழுக் கூட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை:-

நாம் பார்க்காத வெற்றியும் இல்லை; நாம் பார்க்காத தோல்வியும் இல்லை. தேர்தலில்தான் தோல்வி அடைந்திருக்கிறோமே தவிர, நிரந்தரமாக இல்லை. திமுகவின் எதிர்காலத்தை திட்டமிட நமக்கு கால அவகாசம் கிடைத்திருப்பதாக எடுத்துக் கொள்வோம்.

திமுக வரலாற்றில் இது மிக முக்கியமான செயற்குழு. உங்களின் ஒப்புதலுடன் திமுகவின் அமைப்பு முறையில் முக்கியமான பெரிய மாறுதல்களைச் செய்யவிருக்கிறோம்.

திமுக தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் கடந்த பிறகும், கழகம் வலிமையோட இருப்பதற்கான காரணம் நம் அமைப்புமுறை தான்.

தலைவர் கருணாநிதியின் வரிகளை நீங்க மறந்திருக்க மாட்டீர்கள். “இந்த கருணாநிதியின் வாழ்வு முடிந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்வு முடியாது! அதனை, அதன் அமைப்புமுறை காப்பாற்றும்!” இதுதான் அவர் குறிப்பிட்டது. அப்படிப்பட்ட அந்த அமைப்பு முறையின் வலிமையால்தான் நாம் நிற்கிறோம்.

நாம் தோல்வியடைய பல காரணங்கள் இருப்பினும் நிர்வாகிகளின் செயல்பாடுகளும் ஒன்று. அதையும் நாம் மறைக்கத் தேவையில்லை.

நம் தவறுகளை முதலில் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். வெளிப்படையாக ஒப்புக் கொள்ள வேண்டும். எந்தத் தனிமனிதரின் தவறாக இருந்தாலும் - அதனால் பாதிக்கப்படுவது எழுபத்தைந்தாண்டு காலக் கழகம்.

தோல்விக்கு பிறகு, எத்தனையோ காரணங்கள் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியாக பார்த்து குறைகளைக் கண்டறிந்து ஆளை மாற்றுவதைவிட முழுமையான ஒரு சுய பரிசோதனை வேண்டும் என முடிவெடுத்தேன்.

அந்த வகையில் திமுகவின் நிர்வாக அமைப்பில் பல மாறுதல்களைச் செய்யவிருக்கிறோம். கடுமையானதாகத்தான் இருக்கும்; சிலருக்கு கசப்பானதாகவும் இருக்கும். கசப்புதான் உடலுக்கு நன்மை செய்யும். அதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த மாறுதல்கள் அடுத்த நூறாண்டுக்கு திமுக உயிர்ப்போடு இருப்பதை உறுதி செய்யும்.

தேர்தல் தோல்விக்குப் பிறகு, 38 பேர் கொண்ட கள ஆய்வுக் குழுவை அமைத்தேன். தொகுதி வாரியாக நிர்வாகிகளிடம் கருத்துக்களைக் கேட்டு அதை அறிக்கையாக கொடுத்திருக்கிறார்கள். அது தவிர, தனியாக இணையதளம் உருவாக்கப்பட்டு அதன் மூலமும் பல்லாயிரக்கணக்கான கருத்துகள் பெறப்பட்டு, அவை அனைத்தையும் தொகுத்து நான் முழுமையாக வாசித்து உள் வாங்கியிருக்கிறேன்.

ஊருக்கே வெளிச்சம் கொடுக்கும் விளக்குக்கு, தனக்கு கீழே இருக்கும் இருட்டு தெரியாது. அப்படித்தான் நம்மிடம் இருந்த தவறுகளை கண்டறியத் தவறிவிட்டோம்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையில - திட்டங்களை வகுக்க, தங்கம் தென்னரசு தலைமையில, மறுசீரமைப்புக் குழுவை அமைத்தேன்.

அந்தக்குழு அறிவாலயத்தில் பல நாள் கூடி, ஒவ்வொரு பிரச்சினையாக ஆய்வு செய்து, இடைக்கால அறிக்கையை என்னிடம் கொடுத்தார்கள். முக்கியமான தலைமை கழக நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து தீர்மானமாக உருவாக்கியுள்ளோம்.

இளைஞர்கள், பெண்கள் நம்பிக்கையை மீண்டும் நமக்கு பெற்றுத் தருவது போல நம் நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

இனி வரும் நிர்வாகிகளுக்கு, அந்தந்த பொறுப்புகளுக்கு ஏற்ப வயது வரம்பையும், பதவிக்காலத்தையும் அறிமுகப்படுத்தப் போகிறோம். புதுமுகங்களுக்கு அதிக எண்ணிக்கையில் பொறுப்புகளை வழங்கப் போகிறோம்.

விரைவில் புதிய உறுப்பினர் சேர்க்கையை நாம் தொடங்க வேண்டும். உறுப்பினர் சேர்க்கை நேர்மையானதாக - உண்மையானதாக அமைய வேண்டும். உறுப்பினர் சேர்க்கைக்குப் பிறகு அனைத்து மட்டத்திலும் உட்கட்சித் தேர்தலை முறையாக நடத்துவோம். தகுதி வாய்ந்த புதிய நிர்வாகிகள் வெற்றி பெற்று வருவார்கள்.

நியமனங்களாக இல்லாமல் தேர்தல் மூலமாக வெல்பவர்கள் சிறப்பாக செயல்படுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு உள்ளது. கட்சியை மறுசீரமைப்பு செய்வதன் மூலமாக மட்டும்தான், நாம் மீண்டும் அரசியல் வெற்றியை பெற முடியும். எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக கட்சி சீரமைப்புகளைச் செய்ய வேண்டும். அதற்கு முதலில் நமக்கு மனமாற்றம் வர வேண்டியது அவசியம். மாறுதலுக்குத் தயார் ஆகாமல் வெற்றி பெற முடியாது.

என்னுடைய வருத்தமெல்லாம், கொள்கை கோட்பாட்டில், உழைப்பில் உறுதியில், போராட்டக் குணத்தில் வலிமையாக இருக்கிறவர்கள் கூட நிர்வாகிகளை அரவணைப்பதில் சறுக்கிவிடுகிறார்கள்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். எதிர்க்கட்சிக்காரர்களைப் பாத்தால் மலரும் முகம், நம் கட்சிக்காரர்களைப் பார்த்தால் மலர்வது இல்லை. எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்தால் வணங்கும் கை, நம் கட்சிக்காரர்களைப் பார்த்தால் வணங்குவது இல்லை.

தனக்கு இணையாக யாரும் வளரக் கூடாது என நினைத்தால் அந்த மாவட்டத்தில அவர்கள் மட்டும்தான் இருப்பார்கள். ஒரு மாவட்டச் செயலாளரை மட்டும் வைத்து அந்த மாவட்டத்தில் கட்சியை வளர்த்துவிட முடியாது. ஒரு MLA மட்டுமே வலிமையாக இருந்தால் அந்தத் தொகுதியில் வென்றுவிட முடியாது.

ஒவ்வொரு தொண்டனும் ஒரு நிர்வாகியாக செயல்படும் போதுதான் இயக்கம் வளரும்; இயக்கம் வாழும்! படைக்கு இளையோர் வரும்போது, அவர்களை மூத்தோர் வரவேற்று வழி நடத்துவதுதான் வலுவான படைக்கு அடையாளம்.

இப்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்? மக்களுக்காக உழைக்காமல் - போராட்டம் நடத்தாமல் - கொள்கை இல்லாமல் - நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் - ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இதை பார்த்து நாமும் அப்படி ஆக முடியாது - ஆகிடவும் கூடாது! அது போன்று நாமும் கட்சியை நடத்தலாம் என்று நினைக்கவே கூடாது.

நாம் நிரந்தரம்! நாம் Bore அடிக்கிறது என அரசியலுக்கு வந்தவர்கள இல்லை போராட வந்தவர்கள்! வெற்றி தோல்வியில் நம் இயக்கத்தின் வாழ்க்கை அடங்கி இருக்கப் போவது இல்லை. ஒரு தேர்தலில் தோற்றால் அடுத்த தேர்தல் வரும் வரை தூங்கி வழிவதுதான் மற்ற கட்சிகளின் வழக்கம்.

எதிர்கட்சியாக இருந்தாலும் சுணங்கிடாமல், மக்கள் நலனுக்காக சிறப்பாகச் செயல்படும் கட்சி திமுக என நம் எதிரிகளே சொல்வார்கள். Comeback கொடுப்பதில் நாம் Specialist! சிறப்பாகக் கொடுப்போம்!

கடந்த முறை வென்ற பிறகு வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து நல்லாட்சி கொடுப்போம் எனச் சொன்னோம்; அதைச் செய்தும் காட்டினோம். இப்போது தோற்ற பிறகும் நான் சொல்கிறேன், நமக்கு வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்துதான் போராடப் போகிறோம். அவர்களின் நலனுக்கும் துணைநிற்கப் போகிறோம்.

நம் கட்சிக்காரர்கள் முதலில் அவர்கள் வீட்டில் அரசியல் பேச வேண்டும். நம் பிள்ளைகள், நம் உறவினர்களிடம் முதலில் பரப்புரை மேற்கொள்ள வேண்டும். நம் உறவினர்கள், அக்கம்பத்தினர் வாக்குகளை முழுமையாக வாங்க வேண்டும்.

இப்போதைய முதல்வர் நாம் கொண்டு வந்த எல்லா திட்டங்களுக்கும் பெயர் மாற்றுவதில் பிசியாக இருக்கிறார். சட்டப்பேரவையை சினிமா செட் என நினைத்து பஞ்ச் டயலாக் பேசிக் கொண்டிருக்கிறார். நம்மை பொறுத்தவரை வெற்றியோ தோல்வியோ, மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்தவர்கள் நாம்.

இனமும் - மொழியும் - நாடும் இருக்கும் வரை கருப்பு சிவப்புக் கொடி பறக்க வேண்டும் என்ற நினைப்புடன் நாம் உழைக்க வேண்டும். அப்படி, உழைக்கத் தேவையான உடன்பிறப்புகளை திமுகவில் அதிகம் சேர்க்க வேண்டும். எல்லாரும் சேர்ந்து உழைப்போம்!

அண்ணா உருவாக்கிய இயக்கத்தை - கருணாநிதி வளர்த்த இயக்கத்தை இன்னும் வலிமை கொண்டதாக வளர்த்தெடுப்போம். இவ்வாறு மு.க. ஸ்டாலின் உரையாற்றினார்.



■ மதுரை சின்னசொக்கிகுளத்தில் ரூ.4.06 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தை எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம். கோபிசன், மாநகராட்சி மேயர் (பொறுப்பு)/துணை மேயர் தி.நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், மாநகராட்சி தத்தனேரி மற்றும் கோச்சடையில் ரூபாய் 19.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் கட்ட திடக்கழிவு இடமாற்றும் நிலையத்தைஎரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் திறந்து வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., ,மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர்கல்லாணை ,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் கோபிசன் ,மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் நாகராஜன் ,மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார்,இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்

# மதுரையில் ‘கலர்ஸ் 2.0’ ஆரோக்கியமும் அழகும் இனி ஒரே இடத்தில்... புதிய கிளை துவக்கம்




மதுரை, ஆக.23-

மதுரை சொக்கிக்குளம் கோகலே சாலையில் உள்ள ஆரா எண்டர்பிரைசஸ் வளாகத்தில், முன்னணி ஹெல்த் அண்ட் வெல்னஸ் நிறுவனமான ‘கலர்ஸ் ஹெல்த்கேர்’ நிறுவனத்தின் ‘கலர்ஸ் 2.0’ புதிய கிளை பிரம்மாண்டமாக தொடங்கப்பட்டது. புதிய கிளையை நடிகை அபிராமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார். புதிய மையத்தில் உடல் எடை கட்டுப்பாடு, சருமம் மற்றும் தலைமுடி பராமரிப்புக்கான நவீன வெல்னஸ் சேவைகள் வழங்கப்படுகின்றன. அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் அனுமதி பெற்ற நவீன உபகரணங்களுடன் சர்வதேச தரத்தில் சேவைகள் வழங்கப்படுவதாக நிறுவன நிர்வாகம் தெரிவித்தது. நிகழ்ச்சியில் நடிகை அபிராமி பேசுகையில், உடல் எடை கட்டுப்பாடு மட்டுமின்றி சருமம் மற்றும் தலைமுடி பராமரிப்புக்கும் நவீன வெல்னஸ் மையங்கள் பயனுள்ளதாக இருக்கும் என்றார். தொடக்க விழாவை முன்னிட்டு ஒரு பேக்கேஜ் பெற்றால் மற்றொரு பேக்கேஜ் இலவசம் என்ற சிறப்பு சலுகையையும் அவர் குறிப்பிட்டார்.நிறுவன நிர்வாக இயக்குநர்கள் வெங்கட சிவாஜி கூன், டாக்டர் விஜய் கிருஷ்ணா, செயல்பாட்டு இயக்குநர் கிருஷ்ணராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர். 22 ஆண்டுகளாக வெல்னஸ் துறையில் சேவையாற்றி வரும் ‘கலர்ஸ் ஹெல்த்கேர்’ நிறுவனம், 250-க்கும் மேற்பட்ட ஊட்டச்சத்து நிபுணர்கள், 100-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் 2,000-க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களுடன் செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. விழாவில் வெல்னஸ் துறை நிபுணர்கள், நிறுவன பிரதிநிதிகள், பணியாளர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஏராளமான அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# தொகுதி பிரச்சினைகளைப் பேச எம்எல்ஏக்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை: பிரேமலதா விமர்சனம்



சென்னை, ஆக.23-

சட்டப்பேரவை வளாகத்தில் தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: தொகுதி மறுசீரமைப்பு போன்ற பிற விவகாரங்களுக்கு ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் பேசியுள்ளனர்.

மக்கள் நலன் மற்றும் தொகுதிப் பிரச்சினைகளைப் பேச வந்த எம்எல்ஏக்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. குறிப்பிட்ட துறை சார்ந்த அமைச்சர்கள் மட்டுமே அதற்கான பதில்களை அளித்தால் நேர விரயத்தைத் தவிர்க்கலாம்.

குறிப்பாக விளையாட்டுத்துறை சார்பாக கேள்வி எழுப்ப ப்பட்டால் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பதிலளிக்கலாம். ஆனால், அனைத்து க்கும் அவரே பதில் அளித்து வருகிறார். பாதி நேரம் அவரே பேசுவதால் மடைமாறுகிறது, நேரம் விரயமாகிறது.

விருத்தாசலம் தொகுதியில் உள்ள என்எல்சி மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டாலும், அப்பகுதி மக்களுக்கும் விவசாயிகளுக்கும் போதிய மின்சாரம் கிடைப்பதில்லை.

விருத்தாசலம் தொகு தியில் 8 நீதிமன்றங்கள் இருக்கின்றன, ஆனால் அங்கு குடிநீர், கழிப்பறை போன்ற வசதிகள் இல்லை. அனைத்தும் பழைய கட்டிடங்களாக உள்ளன. இதனால்தான் விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என கேட்கிறேன்.

தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கொலைகள், போதை கலாச்சாரம் ஆகியவை உள்ளன. அதை இரும்புக்கரம் அல்ல; எஃகுக்கரம் கொண்டு அடக்க வேண்டும்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாததே இந்தப் பிரச்சினைகளுக்கு முக்கியக் காரணம். மின்சாரத்துறையில் பணியாற்றும் 5,391 கேங்மேன்கள் மற்றும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்ரண்டிஸ் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு நகராட்சி மற்றும் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.23-

கன்னியாகுமரி கொல்லங்கோடு நகராட்சி மற்றும் முஞ்சிறை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆர்வு மே ற்கொண்டு நெரியி ல்கையில் கன்னி யாகுமரி மாவட்டத்தி ற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் அத்தியாவசிய திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. சமத்துவறத்தில் 16-6 அதன்ஒரு பகுதி கொங்காங்கோடு நகராட்சிக்குட் நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ், ரூ.03 லட்சம் மதிப்பில் 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கண்ட புதிய பேண்டுக தொட்டி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கட்டுமானப் பணிகளின் தரம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பன்பாட்டிற்கு கொண்டு துறை அலுவர்கள் மற்றும் ஒப்பந்தாரருக்கு



அறிவுறுத்தப்பட்டது. மேலும் சமத்துவபுரத்தில் வேது மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ், ரூ 48 30 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் தினசரி சந்தை கட்டுமானப் பணிகள் ஆய்வு மேற்கயம்பப்பட்டது குறிப் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. oh (Founciation) h தொடர்ந்து மார்த்தாண்டம்துறையில் 15-வது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.75 லட்சம்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் இறுதிகட்ட பணிகள் Bugis பாடுவவயிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எஞ்சியுள்ள மின்சாரப் பணிகள் மற்றும் நரைன பணிகளை விரைவாகவும், தரமான முறையிலும் முடித்து. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு டனடி கொண்டு துறை அகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் மேடவிளாகம் பகுதியில் அடங்கி வரும் நியாயவிலைக் கடைக்கு நேரில் சென்று. பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அடங்கலின்றி விடுயோகம் செய்யப்படுகிறதா மேற்கொள்ளப்பட்டது. மேலும் நியாயவிலைக்கடையின் குடும்ப அட்டைத்தாரர்களின் எண்ணிக்கை கேட்டறியப்பட்டது குடும்ப அட்டைந்தார்கள் விரல் ரேகை பதிவு செய்வது நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மெற்ரும்பம் பகுதியிங் ரூ 30.60 இட்ச மதிப்பில் நடைபெற்று வரும் சாலை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது லிகள் நிரப்பப்பட்டு உள்ளது. பணிகளை தரமானதாக விலாந்து முடிச்சிட துறை சார்ந்க அலுவமர்களுக்கு அறிவுறுத்தபட்டது. தொந்து க்குளம் குதியில் 15வது நிதிககுழு மானியத்தின் கீழ் ரூ.50 15லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சுகாதார பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது லிண்டல் மட்டம் நடைபெற்றுள்ளது பணிகளை விந்து முடித்த பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு ஊ துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தாட்டது. முயிராய். செய்தியாளர்களிடம் நெரிவித்தார்கள். பணிகள் நேரில் ஆட்சித்தலைவர் நடைபெற்ற ஆய்வில் கொல்லங்கோடு நகராட்சி ஆணையர் சங்கர். கிள்ளியூர் மட்டாட்சியர் ஜசேகர் டார் வார்ச்சி அலுவலர் ாஜருமார் துறை அயர்கள் உட்பட பலர் கலந்துகெண்டார்கள்.



■ திரைப்பட நடிகர் சிவகார்த்திகேயன் அக்ஷயா தங்க மாளிகை புதிய கடையை திறந்து வைத்தார், சென்னை, தி.நகர்,தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துக்களுடன், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர்,ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என்.ஆனந்த் ,தியாகராய நகரில் புதிதாக திறக்கப்பட்ட அக்ஷயா தங்க மாளிகை நகைக்கடைக்கு நேரில் சென்று, அதன் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகத்தினரை சந்தித்து தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்தார்.இந்நிகழ்வில் நடிகர் திலகம் பிரபு , சென்னை தெற்கு (வடக்கு) மாவட்டக் கழகச் செயலாளர் கே.அப்புனு (எ) வேல்முருகன் மற்றும் கடை நிர்வாகத்தினர் உடன் இருந்தனர்.



# நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி, ஆக.23-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு. தலைமையில் நடைபெற்றது. நீலகிரியில் E1-Nino தாக்கம் இருப்பதால் கால்நடைகளை பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் உரங்களுக்கு எவ்வாறு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது என்ற விவரத்தினை சமர்ப்பிக்குமாறு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. விவசாயிகள் திறன்பட உரப் பயன்பாட்டை பின்பற்ற விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும்,VB GRAM G identification of maikall land திட்டத்தில் கால்நடைகளுக்கு தீவன பயிர் வழங்கிட வட்டார வாரியாக தேர்வு செய்யப்பட்ட 3 ஏக்கர் மேய்ச்சல் நிலங்களின் விவரங்களை சமர்ப்பிக்குமாறும், மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சித்ரா, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மரகதமணி , தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஜெயலட்சுமி. விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நடைபெற்ற சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வுசெய்யப்பட்டவர்களுக்கு தனியார் துறைகளில் பணிபுரிவதற்கானஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், வழங்கினார்.



# மோப்ப நாய்களுக்கு ஓய்வுக்காலப் பராமரிப்பு அறிவித்த மராட்டிய அரசு!!

மராட்டியம், ஆக.23-

போலீஸ் மோப்ப நாய்கள் ஓய்வு பெற்ற பின் அதன் உணவு, மருந்து உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் அரசே ஏற்கும் என முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் அறிவித்துள்ளார். அறிவித்துள்ளார். ஓய்வுக்கு பின் யாருக்கும் தத்து கொடுக்காமல், காவல்துறையின் கீழ் ஏற்கனவே உள்ள பராமரிப்பாளர் வசமே நாய் தொடர்ந்து இருக்கும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 10 ஆண்டுகள் சேவையாற்றிய நாய்களை, ஓய்வுக்குப் பின் தவிக்க விடக் கூடாது என ஃபட்னாவிஸ் கருத்து தெரிவித்துள்ளார்.



# அம்பத்தூர் இசக்கியம்மன் ஆலயத்தில் வரலட்சுமி பூஜை

மாதவரம், ஆக.23-

அம்பத்தூர் அடுத்த கள்ளிக்குப்பம் பகுதி ஓம்சக்தி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஓம்சக்தி இசக்கியம்மன் ஆலயத்தில் வரலட்சுமி விரத பூஜை முன்னிட்டு திருவிளக்கு பூஜை ஆலயநிர்வாக செயலாளர் ஆறுமுகம் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், குங்குமம், சந்தனம்,பன்னீர், தேன் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் சுமார் 100க்கும் மேற்பட்ட பெண்கள் திருவிளக்கு பூஜையில் கலந்துகொண்டு தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இதனைத்தொடர்ந்து ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு மங்களபொருட்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# வெலிங்டன் கண்டோன்மென்ட் போர்டு திடக்கழிவு மேலாண்மை -2026 விதிகள்படி விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது

நீலகிரி, ஆக.23-

மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டு சார்பில், ’திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026’ (Solid Waste Management Rules, 2026) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கன்டோன்மென்ட் தலைவரும், மெட்ராஸ் ரெஜிமென்ட் சென்டர் கமாண்டண்டுமான பிரிகேடியர் கிருஷ்ணேந்து தாஸ் மற்றும் கன்டோன்மென்ட் முதன்மை நிர்வாக அதிகாரி டி.கிண்டியா தலைமையில் நடைபெற்றது.

புது தில்லி டி.ஜி.டி.இ (DGDE) அவர்களின் வழிகாட்டுதலின்படி, வெலிங்டன் கன்டோன்மென்ட் பகுதியில் உள்ள அனைத்து கழிவு உற்பத்தியாளர்களிடையே தூய்மையான மற்றும் ஒருங்கிணைந்த கழிவு மேலாண்மை முறையை ஊக்குவிக்கும் வகையில் இந்த அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

ரோபெரியா அரங்கம் (Roperia Hall), எம்.ஆர்.சி (MRC), வெலிங்டன்

முக்கிய தலைப்புகளான

கழிவு உற்பத்தி யாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்



பெருமளவில் கழிவு உருவாக்குபவர்களின் (Bulk Waste Generators) பொறுப்புகள்

நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களான

தூய்மை யான, பசுமை யான மற்றும் விழி ப்புணர்வுள்ள சமூகத்தை உருவாக்கும் இம்முயற்சியில் அனைவரும் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கன்டோன்மென்ட் போர்டு சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திடக்கழிவு மேலாண்மை குறித்து திரையிடப்பட்ட சிறப்பு குறும்படங்கள் எளிய முறையில் அனைவரையும் கவர்ந்தன.

நிகழ்ச்சி யில் உரை யாற்றிய MRC கமாண்டன்ட் பிரிகேடியர் கிருஷ்ணனேந்துதாஸ், கன்டோன்மென்ட் பகுதியைத் தூய்மையாக வைப்பதற்குச் சிறப்பாகப் பணியாற்றும் தூய்மை காவலர்களைப் பாராட்டினார். குறிப்பாக, பண்டிகை நாள்கள் என்றும் பாராமல் விடுப்பின்றி

செயலாற்றும் சுகாதார கண்காணிப்பாளர் ராதாகிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர்கள் பழனிசாமி, பூரணி மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் தனது வாழ்த்துகளைத் தெரிவித்து பாராட்டினார். மேலும், கன்டோன்மென்ட் தூய்மையான சுகாதாரப் பகுதியாகத் திகழ அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பாளர்கள் கன்டோன்மென்ட் பொறியாளர் சுரேஷ்குமார், நியமன உறுப்பினர் ஷீபா, முன்னாள் துணைத் தலைவர்கள் வினோத் குமார், பாரதியார், முன்னாள் உறுப்பினர்கள் துரைராஜ், செபாஸ்டியன், மார்ட்டின், மேரி ஷீபா மற்றும் கிராம முக்கியஸ்தர்கள், கிராம தலைவர்கள், பள்ளி ஆசிரியர்கள், ராணுவத்தினர், வியாபாரிகள் ஊழியர்கள் உள்ளிட்டோர் பங்கு பெற்றனர்.

நிகழ்ச்சி சிறப்பம்சங்கள்:

ஈரோட்டிலிருந்து வருகை தந்திருந்த கார்த்திகேயன் அவர்கள், திடக்கழிவு மேலாண்மை முறைகளை மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கமளித்தார். அவரது சிறப்பான பயிற்சி, பங்கேற்பாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. கன்டோன்மென்ட் போர்டு சார்பில் திரையிடப்பட்ட சிறப்பு குறும்படங்கள், கழிவு மேலாண்மையின் அவசியத்தை அனைவருக்கும் உணர்த்தின.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சுகாதார கண்காணிப்பாளர் ராதாகிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர்கள் பழனிசாமி, பூரணி மற்றும் அலுவலகப் பணியாளர் செந்தில்குமார் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

இயற்கையின் பாதுகாப்பு மண்ணைத் தின்று மலடாக்காதே

பிளாஸ்டிக் குப்பையை பூமியில் கொட்டாதே!

மட்கும் குப்பை உரம் சேர்க்கும்

மட்காத குப்பை நஞ்சை விதைக்கும்!

சுத்தமான ஊரை படைப்போம்

நாளைய தலைமுறைக்கு வரம் கொடுப்போம்!

தூய்மைப் பணி தரம் பிரிப்போம் குப்பைகளை

வீணாக்காமல் வளங்களை!

தூய்மை என்பது கடமை அல்ல

நம் ஆரோக்கியத்தின் அடையாளம்!

குப்பையை முறையாக மேலாண்மை செய்வோம்

பசுமைப் போர்வையில் நாட்டை உயர்த்துவோம்! என்ற வாசகத்துடன் விழா இனிதே நிறைவுற்றது



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# "உலகத் தரம் வாய்ந்த சீர்மிகு நகராக உயர்த்துவோம்" – சென்னை நாளில் முதல்வர் விஜய் வாழ்த்து




சென்னை, ஆக.23–

"நவீன உட்கட்டமைப்புகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த சீர்மிகு பெருநகராக சென்னையை மேலும் உயர்த்துவோம்," என்று சென்னை நாளில் முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னை நாளை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்து தமிழக முதல்வர் ஜோசப் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "வரலாற்றின் தடங்களைச் சுமந்தும், நவீனத்தின் வேகத்தோடு பயணித்து, தமிழகத்தின் வெற்றித் தலைநகராகத் திகழும் நம் சென்னையின் பெருமையைப் போற்றும் இந்நன்னாளில் அனைவருக்கும் எனது இனிய "சென்னை நாள்" நல்வாழ்த்துகள். வரலாற்றுச் சிறப்பும், பண்பாட்டுப் பெருமையும், கல்வி, மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான வளர்ச்சியும், உழைப்பும், புதுமையும் சங்கமிக்கும் நகரமாக சென்னை விளங்குவதோடு, பல்வேறு மொழி, இன, பண்பாடுகளைச் சேர்ந்த மக்களை அரவணைத்து, அனைவருக்கும் வாய்ப்புகளை வழங்கும் மாநகரமாகவும் திகழ்கிறது.

சென்னையின் வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாத்து, நவீன உட்கட்டமைப்புகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த சீர்மிகு பெருநகராக சென்னையை மேலும் உயர்த்துவோம். அனைவருக்கும் சமவாய்ப்பும், பாதுகாப்பான சூழலும், வளமான வாழ்வும் கிடைத்திட உறுதியேற்போம். வளரட்டும் சென்னைப் பெருநகரம். உயரட்டும் மக்களின் வாழ்க்கைத்தரம்" என்று தெரிவித்துள்ளார்.

# அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றை ரீல்ஸாக வெளியிட்டால் நடவடிக்கை: பேரவைத் தலைவர் எச்சரிக்கை

சென்னை, ஆக.23–

'அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றை ரீல்ஸாக வெளியிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சட்டப்பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பேசியதாவது: பேரவையில் கேள்வி எழுப்பினால், நாங்களே ஆச்சரியப்படும் அளவுக்கு அமைச்சர்கள் பதில் கூறுகின்றனர்.

சட்டப்பேரவையா, சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியா என்று சந்தேகப்படும் அளவுக்கு பாட்டுகூட பாடுகின்றனர். பதில் அளிக்கும் அமைச்சர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆதாரம் இல்லாத குற்றச் சாட்டை முன்வைக்கும்போது, அவற்றை நீங்கள் (பேரவைத் தலைவர்) அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறீர்கள்.

பேரவை வரலாற்றில் முதல்முறையாக எதிர்க்கட்சியினரைவிட ஆளுங்கட்சியினரின் பேச்சுகள்தான் அவைக் குறிப்பில் இருந்து அதிகம் நீக்கப்படுகின்றன.

நீக்குவதில் அர்த்தமில்லை

அவைக் குறிப்பில் இருந்து சிலவற்றை நீக்கினாலும், அது நேரலையாக செல்லும்போது சமூக வலைதளங்களில் ரீல்ஸாக அதிகம் பகிரப்படுகின்றன. இதனால், அவைக் குறிப்பில் இருந்து நீக்குவது அர்த்தமில்லாமல் போகிறது.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா: திமுகவின் 2021 தேர்தல் அறிக்கையில் சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை செய்யப்படும் என இருந்தது. ஏன் அதை செய்யவில்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்ற முதல்முறையாக பேரவை நிகழ்ச்சிகளை நேரலையில் விட்டிருக்கிறார் முதல்வர்.



அமைச்சர் ஆனந்த்: நேற்று ஒரு சந்தையில் 70 வயது முதியவர், 'நாங்கள் இப்போது தொலைக்காட்சி சீரியல் பார்ப்பதில்லை. சட்டப்பேரவை நேரலைதான் பார்க்கிறோம்" என்றார். தமிழகத்தில் முதல்முறையாக நேரலையை அனுமதித்தவர் எங்கள் தலைவர்.

பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர்: யாருடனும் ஆலோசிக்காமல் தனது அறிவாற்றலால் சுயமாக முடிவெடுக்கும் திறமை முதல்வர் விஜய்க்கு இருப்பதை இந்த 3 மாத ஆட்சியில் எல்லோரும் பார்க்கின்றனர்.

உதயநிதி: திமுக ஆட்சியில்தான் நேரலை முதன்முதலாக செயல்படுத்தப்பட்டது. கேள்வி நேரத்தை நாங்கள்தான் முதல்முறையாக நேரலை செய்தோம். இப்போது கேள்வி நேரமே நடத்த முடியாத நிலைதான் உள்ளது.

பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றை ரீல்ஸ், வீடியோவாக வெளியிடக் கூடாது. அதுகுறித்து பேரவையின் கவனத்துக்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அமைச்சர் ராஜ்மோகன்: முதலில் நேரலை வழங்கியது திமுக ஆட்சி. ஆனால் முழுமையான நேரலை வழங்கியது தவெக ஆட்சி.

மத்திய அரசின் அகில இந்திய வானொலிக்கு 2 ஆண்டுகளாக பேரவையின் நேரலை ஆடியோ வழங்கப்படவில்லை. வானொலியில் நேரலையைக் கேட்க நடவடிக்கை எடுத்தவர் பேரவைத் தலைவர். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



# 92–வது ஆண்டை நிறைவு செய்த மேட்டூர் அணை: 12 மாவட்டங்களில் 17 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு பயன்படுகிறது

மேட்டூர், ஆக.23–

காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மேட்டூர் அணை 92 ஆண்டுகளை நிறைவு செய்து, 93-வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது.

கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தியாகும் காவிரி ஆறு தமிழகம் வழியாகச் சென்று கடலில் கலக்கிறது. கர்நாடகாவில் குறைந்த அளவு பகுதியில் ஓடும் காவிரி ஆறு, தமிழகத்தின் வழியாக 700 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்கிறது. பருவமழை வரும்போது நீர்த்தேக்கத்துக்கு வழியில்லாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

எனவே, பருவமழைக் காலங்களில் காவிரி நீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்தும் நோக்கில், அப்போதைய ஆங்கிலேய அரசு 1925-ம் ஆண்டு மேட்டூர் அணை கட்டுமானப் பணியைத் தொடங்கியது. வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு பொறியாளரான கர்னல் எல்லீஸ் தலைமையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றிய நிலையில், 9 ஆண்டுகளுக்குப் பிறகு 1934 ஜூலை 14-ம் தேதி கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன.

இவ்வாறு ரூ.4.80 கோடி செலவில் கட்டப்பட்ட அணையை, 1934 ஆக.21-ம் தேதி அப்போதைய சென்னை கவர்னர் ஜார்ஜ் பிரெட்ரிக் ஸ்டான்லி திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். மேட்டூர் அணையின் நீளம் 5,300 அடி. நீர்த்தேக்கப் பகுதி 59.25 சதுர மைலும், மொத்த கொள்ளளவு 93.5 டிஎம்சியும் ஆகும். அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 120 அடி.

அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் சேலம், கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சுமார் 17 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு பயன்படுகிறது. அணையில் உபரி நீரை வெளியேற்ற 16 கண் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தலா 20 அடி உயரமும், 60 அடி அகலமும் கொண்டவை.

இதற்கு அணை கட்டிய கண்காணிப்புப் பொறியாளரான 'கர்னல் எல்லீஸ்' பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேட்டூர் அணை கட்டப்பட்ட 1934 முதல் ஜூன் 12-ம் தேதி பாசனத்துக்கு 20 முறை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக 11 முறையும், காலதாமதமாக 62 முறையும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளன. பல சிறப்புகள் வாய்ந்த மேட்டூர் அணை தனது 93-வது ஆண்டில் நேற்று அடியெடுத்து வைத்தது.

நீர் வரத்து சரிவு: இதனிடையே அணைக்கு நேற்று காலை விநாடிக்கு 10,579 கனஅடியாக இருந்த நீர்வரத்து, மாலை 10,414 கனஅடியானது. குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி திறக்கப்பட்டு வருகிறது. நீர்மட்டம் 85.17 அடியாகவும், நீர் இருப்பு 47.30 டிஎம்சியாகவும் உள்ளது.

# செப்டம்பர் 1ம் தேதி முதல் புதிய தமிழ் திரைப்படங்களை வெளியிடுவதில்லை: தயாரிப்பாளர்கள் சங்கங்கள் அறிவிப்பு!

சென்னை, ஆக.23–

செப்.1 முதல் படப்பிடிப்பு, போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நிறுத்தப்படும் எனவும் புதிய படங்கள் எதுவும் வெளியாகாது எனவும் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளது. திரையரங்குகளில் ரிலீஸாகும் படங்கள் 8 வாரங்கள் கழித்துதான் OTT-யில் வெளியிட வேண்டும் என்ற திரைப்பட விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்க உரிமையாளர்களின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி; நல்ல நடத்தை இருந்தால்தான் போலீசுக்கு நல்ல பெயர் இருக்கும்: டிஜிபி மகேஷ்குமார் பேச்சு

கூடுவாஞ்சேரி, ஆக.23–

செங்கல்பட்டு மாவட்டம், ஒத்திவாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அதிதீவிரப்படை பள்ளி பயிற்சி மையம் துப்பாக்கி சுடும் தளத்தில் கடந்த 19ம் தேதி முதல் 21ம் தேதி (நேற்று) வரை ஆண்கள் மற்றும் பெண்களுக்கான துப்பாக்கி சுடுதல் போட்டிகள் தனித்தனியாக நடத்தப்பட்டன.இதில் மொத்தம் 13 வகையான போட்டிகள் 3 பிரிவுகளின் கீழ் நடத்தப்பட்டது. இதில் ரைபில் பிரிவில் 5 போட்டிகள், பிஸ்டல், ரிவால்வர் பிரிவில் 4 போட்டிகள் மற்றும் கார்பைன், ஸ்டன் கன் பிரிவில் 4 போட்டிகள் நடந்தன. இப்போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறையின் பல்வேறு நகரங்கள், மண்டலங்கள் மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும் 235 ஆண் போட்டியாளர்கள் 9 அணிகளாகவும், 103 பெண் போட்டியாளர்கள் 8 அணிகளாகவும் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற நிறைவு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கும், வெற்றி பெற்ற அணிகளுக்கும் காவல் துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவரான மகேஷ்குமார் அகர்வால் பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் சுழற் கேடயங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் பேசுகையில், எப்போதும் குடும்பத்துடனும், வேலையிலும் சந்தோசமாக இருக்க வேண்டும். நல்ல நடத்தை இருந்தால்தான் தமிழ்நாடு போலீசுக்கு நல்ல பெயர் இருக்கும் என்றார்.இந்தப் போட்டியில் காவல்துறை கூடுதல் இயக்குனர் நஜ்மல்கோடா, தமிழ்நாடு அதிதீவிரப் படை காவல் கண்காணிப்பாளர் ஈஸ்வரன், செங்கல்பட்டு மாவட்ட எஸ்பி ஐமன்ஜமால், தாம்பரம் மாநகர காவல் துணை கமிஷனர் கார்த்திக் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# வேளாங்கண்ணி மாதா கோயிலுக்கு இசிஆர் வழியாக பக்தர்கள் பாதயாத்திரை

மாமல்லபுரம், ஆக.23–


நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் பிரசித்தி பெற்ற புனித ஆரோக்கிய மாதா கோயில் அமைந்துள்ளது. அனைத்து மதத்தினரும் வழிபட்டு செல்லும் ஆன்மிக சுற்றுலா தலமாகவும் திகழ்கிறது. பல்வேறு சிறப்புகள் பெற்ற இந்த மாதா கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். அதன்படி, இந்த ஆண்டுக்கான திருவிழா வரும் 29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி, செப்டம்பர் 8ம் தேதி வரை நடைபெற உள்ளது. திருவிழாவை முன்னிட்டு பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் பாதயாத்திரையாகவும், சைக்கிளில் பேரணியாகவும் வேளாங்கண்ணி கோயிலுக்கு சென்று தங்களுடைய நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர். அதன்படி, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் ஏராளமானோர் இசிஆர் சாலை வழியாக வேளாங்கண்ணிக்கு பாதயாத்திரை செல்ல தொடங்கி உள்ளனர்.

மேலும், குழந்தை இயேசுவையும், மாதாவையும் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர். கடந்த, சில நாட்களாக மாமல்லபுரம் இசிஆர் மற்றும் ஓஎம்ஆர் சாலைகளில் காவி உடை அணிந்து வேளாங்கண்ணிக்கு பாதயாத்திரையாக வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பக்தர்கள் இளைப்பாறுவதற்கு இடம் இல்லாததாலும், வழக்கத்தை விட வெயில் வாட்டி வதைப்பதாலும் சாலையோரம் உள்ள மரத்தடி நிழலில் படுத்து ஓய்வெடுத்து செல்கின்றனர்.

# "அமித் ஷா பதிலளிக்க தயாராக இருந்தபோது ஓடி ஒளிந்தது ராகுல் தான்" – நயினார் நாகேந்திரன்

சென்னை, ஆக.23–

'வினாத்தாள் கசிவு விவகாரம் மற்றும் மாணவர் போராட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பதிலளிக்க உள்துறை அமைச்சர் அமித் ஷா தயாராக இருந்தபோது, சபைக்கு வரமாட்டேன் என ஓடி ஒளிந்தது ராகுல் காந்தி என்பதை இந்த நாடே அறியும்' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை பார்த்து "நழுவி ஓடுகிறார்" என்று நீங்கள் சொல்வது சாத்தான் வேதம் ஓதுவது போல இருக்கிறது. வினாத்தாள் கசிவு விவகாரம் மற்றும் மாணவர் போராட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க உள்துறை அமைச்சர் தயாராக இருந்தபோது, "நேருக்கு நேர் நின்று விவாதிக்கத் தைரியமில்லாமல்" சபைக்கு வரமாட்டேன் என ஓடி ஒளிந்தது உங்கள் 'இளம்' தலைவர் ராகுல் காந்தி தான் என்பதை இந்த நாடே அறியும். (எங்கள் உள்துறை அமைச்சர் விவாதத்திற்கு அழைப்பு விடுத்த காணொளியை இத்துடன் இணைத்துள்ளேன், பார்த்துத் தெரிந்து கொள்ளவும்).

நாடாளுமன்றம் நடைபெறும் மிக முக்கியமான நேரத்தில் கூட வெளிநாடுகளுக்கு இன்பச் சுற்றுலா சென்றுவிடும் 'பார்ட்-டைம்' அரசியல்வாதியைத் தலைவராக வைத்துக்கொண்டு, நீங்கள் இப்படிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. காங்கிரஸை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதை 2014 முதல் 2024 வரையிலான இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை 'கூகுள்' செய்து பார்த்தாலே தெரிந்துகொள்ளலாமே. அதனை விட ஒரு பெரிய ஆதாரம் வேண்டுமா என்ன?

'வாள் ஏந்தியவர்கள் அஞ்சப்போவதில்லை' என்று வசனம் பேசுகிறீர்கள் மாணிக்கம் தாகூர். உங்கள் கையில் இருப்பது எஃகு வாள் அல்ல; அட்டை கத்தி. மேலும், வடிவேலு பாணி நகைச்சுவை பற்றிப் பேசுகிறீர்கள்... ஆனால், ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் 'இவிஎம் இயந்திரத்தில் கோளாறு' என்று நீங்கள் சொல்லும் சாக்குப்போக்குகளை விடச் சிறந்த நகைச்சுவை வேறு இருக்க முடியுமா என்ன?' எனத் தெரிவித்துள்ளார்.

# ஆவணி மாதத்தின் முதல் முகூர்த்த நாளை முன்னிட்டு தென்மாவட்ட ஆம்னி பேருந்து கட்டணம் உயர்வு

சென்னை, ஆக.23–

ஆவணி மாதத்தின் முதல் முகூர்த்த நாளை முன்னிட்டு தென் மாவட்டங்களுக்குச் செல்லும் ஆம்னி பேருந்துகளில் கட்டணம் கிடுகிடுவென உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்துகளில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. நெல்லை, நாகர்கோவில், குமரி, மதுரை, தூத்துக்குடி செல்லும் ஆம்னி பேருந்துகளில் பல மடங்கு கட்டணம் உயர்ந்துள்ளது. சென்னையில் இருந்து நெல்லைக்கு ரூ.1,500ஆக இருந்த ஆம்னி பேருந்து கட்டணம் ரூ.3,700 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து நாகர்கோவிலுக்கு ஆம்னி பேருந்து கட்டணம் ரூ.3600 ஆக அதிகரித்துள்ளது.

# "வரலாறு படைத்தவர் சௌகார் ஜானகி" – தமிழக ஆளுநர் புகழஞ்சலி

மூன்று தலைமுறை நடிகர்களுடன் நடித்து வரலாறு படைத்தவர் சௌகார் ஜானகி என தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், "தனியார் மருத்துவமையில் அனுமதிக்கப்பட்டிருந்த பழம்பெரும் நடிகை சௌகார் ஜானகி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்த செய்தி கேட்டு மிகவும் துயர் அடைந்தேன்.

பத்ம ஸ்ரீ, கலைமாமணி, நந்தி விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ள அவர், மூன்று தலைமுறை நடிகர்களுடன் நடித்து வரலாறு படைத்துள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த பல கதாபாத்திரங்களை ஏற்று, அதில் தனக்கென தனி பாணியைக் கடைபிடித்து, 400-க்கும் அதிகமான படங்களில் நடித்து ஒரு சகாப்தத்தையே உருவாக்கினார் என்றால் அது மிகை இல்லை. தமிழ் மொழியில் மட்டும் இல்லாமல் தெலுங்கு, மலையாளம், கன்னட மொழி படங்களிலும் நடித்து குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை செய்துள்ளார்.

அவரது மகள், பேத்தி, குடும்ப உறுப்பினர்கள், உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைவனது திருவடியை அடைந்து விட்ட அவரின் புகழ் என்றும் நிலைத்திருக்கும் என்பதை அவரின் ரசிகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# புதுச்சேரியில் வசித்து தமிழகத்தில் விவசாயம் செய்வோருக்கு கடன் தள்ளுபடி மறுப்பு: தமிழக அரசோடு பேசுவதாக ரங்கசாமி உறுதி

புதுச்சேரி, ஆக.23–

புதுச்சேரியில் வசித்து தமிழகத்தில் விவசாயம் செய்வோருக்கு கடன் தள்ளுபடி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக அரசோடு பேசுவதாக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி விவசாயிகளிடம் உறுதி தந்துள்ளார்.

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை தமிழ்நாடு-புதுச்சேரி விவசாயிகள் ஒருங்கிணைப்பு குழு தலைவர் முருகையன், பொதுச்செயலர் ரவி, பொருளாளர் ஜெயராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் இன்று சந்தித்தனர்.

அப்போது அவர்கள் முதல்வரிடம் மனு அளித்தனர். அதன் விவரம்: புதுச்சேரியில் வசிக்கும் விவசாயிகள் பலரும் புதுச்சேரியை ஒட்டியுள்ள தமிழக பகுதிகளில் விவசாய நிலம் வைத்துள்ளனர். அவர்கள் அங்கே அனைத்து பயிர்களையும் விவசாயம் செய்து வருகிறார்கள். தற்போது தமிழக அரசு விவசாயிகளுக்கு பயிர் கடன் தள்ளுபடி சலுகை அறிவித்துள்ளது.

இச்சலுகை புதுச்சேரியில் வசிக்கும் தமிழக விவசாயிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதி தமிழகததுடன் பூளோக ரீதியாக பின்னிபிணைந்துள்ளது. புதுச்சேரியில வசிக்கும் தமிழக விவசாயிகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்த தமிழக அரசின் சலுகை, விவசாய பயிர் கடன் தள்ளுபடியை பெற்று தர வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

அதைத்தொடர்ந்து நிர்வாகிகள் முதல்வரிடம், புதுச்சேரியை ஒட்டிய தமிழக பகுதிகளில் விவசாயிகள் பயிர் சாகுபடி செய்கிறோம். ஏற்கெனவே தமிழக அரசு கடன் தள்ளுபடி உள்ளிட்ட திட்டங்கள் தமிழகத்தில் விவசாயம் செய்யும் புதுச்சேரியில் வசிக்கும் விவசாயிகளும் பயன் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தினர்.

தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள கடன் தள்ளுபடி திட்டம் மறுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழகத்தில் ஆட்சி செய்து வரும் தவெக அரசு இது போன்ற புதிய அணுகுமுறையை கையாள்வதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு அரசோடு பேசி ஏற்கனவே நடைமுறையில் உள்ளது போல விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி திட்டம் செயல்படுத்த வேண்டும்" என்றனர். இதையடுத்து விவசாயிகளிடம் புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, "இது சம்பந்தமாக தமிழக அரசோடு பேசுகிறேன்" என்று உறுதி தந்தார்.




# “மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் எங்களைப் பார்த்தவுடன் தாங்க முடியவில்லை” அமைச்சர் ஆனந்த் பேச்சு

மணப்பாறை, ஆக.23-
திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே ஆண்டவர் கோவில் பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை தொழிலாளர்கள் சங்கத்தின் 2-வது மாநில மாநாட்டில், அமைச்சர் ஆனந்த் பங்கேற்று பேசினார். மாநாட்டில் ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசாணைப்படி குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,593 வழங்க வேண்டும்; தற்காலிக ஊழியர்களுக்கு வெளிமுகமை முறையைத் தவிர்த்து நேரடியாக ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மருத்துவக் காப்பீடு, பொது வருங்கால வைப்பு நிதி, குடும்ப பாதுகாப்பு நிதி, கொரோனா கால ஊக்கத்தொகை உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அமைச்சர் ஆனந்த் பேசுகையில், “கொரோனா காலத்தில் தூய்மைக் காவலர்கள் மகத்தான சேவை செய்தனர். ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் மிகக் குறைவாக இருந்தது. அவர்களது கோரிக்கைகளை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்,” என்றார். மேலும், “நாங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள்தான் ஆகிறது. இதற்கு முன்பு திமுகவும் அதிமுகவும் மாறி மாறி ஆட்சி செய்தனர். இப்போது எங்களைப் பார்த்தவுடன் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை,” என அவர் தெரிவித்தார். இந்த மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வீரபாண்டியன், எம்எல்ஏக்கள் கதிரவன், விக்னேஷ், ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் (21.08.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. பாலசுப்ரமணியன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மாவட்ட வருவாய் அலுவலர் / செயலாட்சியர் இராஜலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் மணி, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இளவரசன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் தீபா, உதவி இயக்குநர்கள் ஊராட்சிகள் மகாதேவன், முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) (பொ) அப்துல்ரஹ்மான், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.




■ தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S. பிரவீன் கௌதம் உத்தரவின்பேரில், தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் மனநலம் தொடர்பான வழிகாட்டுதல் கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாவட்டக் கல்வி அலுவலர்கள், அனைத்து கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், அவர்களின் மனநலத்தைப் பாதுகாத்தல், மாணவர்களின் பிரச்சினைகளை உரிய முறையில் கண்டறிந்து தீர்வு காணுதல், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து கூட்டத்தில் விரிவாக வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

# ‘4 முறைக்கு மேல் பணம் எடுத்தால் கட்டணமா?’

## எஸ்பிஐ வாபஸ் பெற தமிழக காங். வலியுறுத்தல்

சென்னை, ஆக.23-
“ஜீரோ பேலன்ஸ் வங்கிக் கணக்கில் இருந்து 4 முறைக்கு மேல் பணம் எடுத்தால் கட்டணம், ஜிஎஸ்டி வசூலிக்கும் உத்தரவை மத்திய அரசு, எஸ்பிஐ திரும்பப் பெற வேண்டும்” என்று தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஜீரோ பேலன்ஸ் கணக்குகள், ஏழை எளிய சாமானிய மக்கள் நவீன வங்கிச் சேவையைப் பெற அடித்த ளமிட்டன.




ஏழை மக்கள் பய ன்படுத்தும் இந்த கணக்கி ல்தான் தற்போது மத்திய பாஜக அரசு கைவை க்கிறது. கார்ப்ப ரேட்களுக்கு பல லட்சம் கோடிகளை தள்ளுபடி செய்யும் மத்திய அரசு, ஏழை மக்கள் பயன்படுத்தும் ஜீரோ பேலன்ஸ் கணக்கில் 4 முறைக்கு மேல் ரொக்கம் எடுத்தாலே ரூ.15 மற்றும் ஜிஎஸ்டி கட்டணம் வசூலிக்கிறது.

மக்கள் பணப் பயன்பாட்டை விட்டுவிட்டதாக ஆட்சியாளர்கள் பகல் கனவு காண்கின்றனர். கிராமப்புற மக்கள் இன்றும் ரொக்கப் பணத்தையே நம்பியுள்ளனர். பொதுமக்களிடம் புழங்கும் ரொக்கப் பணம் 2024-25-ல் 6.5 சதவீதம், 2025-26-ல் 12 சதவீதம், தற்போது 2026-27-ல் 12.9 சதவீதம் என மீண்டும் உயர்ந்து வருகிறது.

உண்மை நிலவரம் இப்படி இருக்க, ஏழை மக்கள் தங்கள் சொந்தப் பணத்தை எடுப்பதற்கே அபராதம் விதிப்பது அப்பட்டமான பகல் கொள்ளை. ஏழை எளிய மக்களின் உழைப்பை உறிஞ்சும் இந்த கட்டண உயர்வை மத்திய அரசும், எஸ்பிஐ வங்கி நிர்வாகமும் உடனே திரும்பப் பெற வேண்டும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# “எப்ஐஆர் பதிவு செய்ய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் 7 மணி நேரம் போராட வேண்டி உள்ளது”

புதுடெல்லி, ஆக.23-
பாதிக்கப்பட்டவர் அளித்த புகாரின் அடிப்படையில் டெல்லியில் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்படுவதற்கு 30 நாட்களும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவரின் ( Leader of the Opposition) ஏழு மணி நேர தர்ணா போராட்டமும் தேவைப்பட்டுள்ளன என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம் விமர்சித்துள்ளார். டெல்லியில் ஜூலை 20 அன்று நடைபெற்ற பேரணியில் பங்கேற்ற சாஹில் லோச்சவ் எனும் இளைஞர் பெல்லட் குண்டு தாக்குதலுக்கு உள்ளானார்.

இது தொடர்பாக டெல்லி போலீசில் அவர் புகார் அளித்தார். எனினும், அந்த புகார் முதல் தகவல் அறிக்கையாக பதியப்படவில்லை.இதைக் கண்டித்து, பாதிக்கப்பட்ட சாஹில் லோச்சவ் உடன் இணைந்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்ற வீதியில் உள்ள காவல் நிலையத்தில் முறையிட்டார்.




பின்னர், அவர்கள் காவல் நிலையம் முன்பாக தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை தொடங்கிய இந்த போராட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பிரியங்கா காந்தி, ஜெயராம் ரமேஷ், குமாரி செல்ஜா உள்பட பலர் கலந்து கொண்டனர். 7 மணி நேர தொடர் போராட்டத்துக்குப் பிறகு புகார் மீது முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்பட்டு அதன் நகல் காவல்துறை சார்பில் வழங்கப்பட்டது. இதை சுட்டிக்காட்டி ப. சிதம்பரம் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், “பாதிக்கப்பட்டவர் அளித்த புகாரின் அடிப்படையில் டெல்லியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு 30 நாட்களும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவரின் ஏழு மணி நேர தர்ணா போராட்டமும் தேவைப்பட்டன.ஒவ்வொரு புகாரின் மீதும் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என்பதே உச்ச நீதிமன்றத்தின் சட்டப்பூர்வமான உத்தரவாக உள்ள நிலையில் இது நிகழ்ந்துள்ளது.தமது விடாமுயற்சிக்காக பாதிக்கப்பட்ட சாஹில் லோச்சபிற்கும், சத்தியாகிரகத்தின் வலிமையை நிரூபித்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கும் பாராட்டுகள்.” என தெரிவித்துள்ளார்.

# அதிமுக இலக்கிய அணி தலைவராக கோ.விசயராகவன் நியமனம்

சென்னை, ஆக.23-
அதிமுக இலக்கிய அணி தலைவராக தமிழக அரசின் முன்னாள் தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர் கோ.விசயராகவன் நியமிக்கப்பட்டுள்ளார்.



அதிமுக இலக்கிய அணி செயலாளராக இருந்த முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன், கடந்த மாதம் அதிமுகவில் இருந்து விலகி, தவெகவில் இணைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து அதிமுகவில் இலக்கிய அணி மாநில செயலாளர் பதவி காலியாக இருந்து வருகிறது.

இந்நிலையில், தமிழக அரசின் முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவனை, இலக்கிய அணி மாநில தலைவராக நியமித்து கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து சென்னையில் பழனிசாமியை சந்தித்து விசயராகவன் வாழ்த்து பெற்றார். எம்ஜிஆர் காலத்துக்கு பிறகு, இப்போது தான் இலக்கிய அணிக்கு தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், குப்பம் கண்டிகை பகுதியை சேர்ந்தவர் விசயராகவன். தமிழக அரசின் உலகத் தமிழாராய்ச்சி கழக இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் உள்ளிட்ட பதவிகளை வகித்துள்ளார்.

இவர் உலகத் தமிழாராய்ச்சி கழக இயக்குநராக இருந்தபோது, அரிய நூல்களை நவீன தொழில்நுட்பத்தில் மின்னாக்கம் செய்தது, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராக இருந்தபோது, அரசு அலுவலகங்களில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான சரியான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த அரசால் உருவாக்கப்பட்ட ஆட்சிச் சொல்லகராதி மூலமாக பல்வேறு ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை உருவாக்கும் பணியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

இது தொடர்பாக கோ.விசயராகவன் கூறும்போது, “பாரம்பரியம் மிக்க, நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, தமிழகத்தில் 30 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் இருந்த மாபெரும் இயக்கமான அதிமுகவின் இலக்கிய அணி மாநில தலைவராக நியமிக்கப்பட்டதை பெருமையாக கருதுகிறேன். இக்கட்சியின் வளர்ச்சியில் எங்கள் அணியின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கும் வகையில் கடுமையாக உழைப்போம்” என்றார்.




# 90 நாட்களில் 1 லட்சம் நபர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர் வழங்கிய திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் பன்னீர் செல்வம்

திருப்பத்தூ, ஆக.23-
திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட 250 க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் பன்னீர் செல்வம் வழங்கினார். இந்நிகழ்ச்சியானது கல்லூரியின் துணை முதல்வர் தியோபில் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி அரங்கில் திரை மூலமாக தமிழ்நாட்டில் நடைபெறும் சாலை விபத்துகள், எதனால் ஏற்படுகிறது, சாலை விதிகளை எவ்விதம் கடைபிடிக்க வேண்டும், அதி வேகமாக செல்வதால் ஏற்படும் விளைவுகள், சாலையை கடக்கும்போது கவனிக்க வேண்டியவை, அலைபேசி பயன்படுத்திக்கொண்டு வாகனத்தை ஏற்படும் உயிர் சேதங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்து திரை மூலமாக வீடியோ மற்றும் கருத்து படங்களின் மூலம் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் பன்னீர் செல்வம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். மேலும் இந்நிகழ்ச்சியில், ஜெ சி ஐ திருப்பத்தூர் எக்செல் தலைவர் தேவேந்திரன் நிகழ்ச்சி குறித்து அறிமுகவுரை செய்தார். இந்நிகழ்ச்சியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்று சிறப்பித்தனர். மேலும், 90 நாட்களில் 1 லட்சம் பேருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியது, மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரிதும் பாராட்டினை பெற்றுள்ளது.




# பால் விலை உயர்த்தக் கோரி சாலையில் பாலை கொட்டி போராட்டம்

திருப்புவனம், ஆக.23-
சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் ஏனாதி கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில், பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி சாலையில் பாலை கொட்டி போராட்டம் நடைபெற்றது. தேர்தல் வாக்குறுதியின்படி பால் விலையை உயர்த்த வேண்டும் என்றும், லிட்டருக்கு ரூ.10 கூடுதல் விலையும், ஊக்கத்தொகையாக ரூ.5-ம் வழங்க வேண்டும் என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. கோரிக்கைகளை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும் என பால் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.




■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி அருகில், தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை சார்பில், மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் நாட்றம்பள்ளி அரசினர் தொழிற்பயிற்சி கல்லூரி முதல்வர் பூங்கோதை மற்றும் பேராசிரியர்கள் உள்ளனர்.




# தவெக அரசுக்கு நாங்கள் வேண்டுமா? அதிகாரிகள் வேண்டுமா? என பெ.சண்முகம் கேள்வி

சென்னை, ஆக.23-
முதலமைச்சர் விஜய் தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும் என்று சிபிஎம் மாநில செயலாளர் பெ.சண்முகம் கூறியுள்ளார். மார்க்சிஸ்ட் ஆதரவால்தான் தவெக ஆட்சி நடக்கிறது. தலைமைச் செயலாளரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். விவரம் தெரியாதவரை ஏன் தலைமைச் செயலாளராக்குகிறீர்கள்? அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்தப் போகிறீர்களா? அல்லது கம்யூனிஸ்டுகளை வைத்துக்கொண்டு ஆட்சியை தொடரப் போகிறீர்களா? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161